# மார்ச் மாத இதழ் 2025

# மார்ச் மாத முக்கிய தினங்கள்

மார்ச் 1. பூஜ்ஜிய வேறுபாடு தினம்
3. உலக சுகாதார தினம்
3. உலக வன விலங்கு தினம்
4. தேசிய பாதுகாப்பு தினம்
4. உலக கேட்போர் தினம்
8. சர்வதேச மகளிர் தினம்
12. உலக சிறுநீரக தினம்
15. உலக ஊனமுற்றோர் தினம்.
15. உலக நுகர்வோர் தினம்
18. ஆயுதப் படை உற்பத்தி தினம்
20. உலக சிட்டுக்குருவி தினம்
20. சர்வதேச மகிழ்ச்சி தினம்
21. உலக வன தினம், கவிதை தினம்
22. உலக நீர் தினம்
23. உலக வானிலை தினம்
23. உலக காலநிலை தினம்
24. காசநோய் தினம்
27. உலக சினிமா தினம்.




S. திவ்யதர்ஷினி
VIII-B


1st MARCH
ZERO
DISCRIMINATION DAY
S.DIVYADHARSHINI
VIII-B

# Zero Difference Day

## 0 March-1

*. 'Zero difference Day' is a concept that promotes equality, social Justice, and the idea of eliminating disparities among different groups in society.

*. It advocates for the elimination of barriers such as race, gender, religion, economic status, or cultural differences that create division or discrimination in the world.

R. Mokitha.
VIII-D.


MARCH - 03
WORLD
WILDLIFE DAY
S. திவ்யதர்ஷினி
VIII-B


SAVE
ANIMALS
உலக வனவிலங்கு
தினம் - Mar - 3
S.B. Tamilanbu
IX A


உலக வனவிலங்கு மார்ச்-3
N. Varun
VII-B

உலக வனவிலங்கு தினம் - மார்ச் - 3




P.திவாகர் VII-A


3.3.2025
உலக
VI - A

உலக வணவிலங்கு தினம்

Mar-3



B. ஹர்ஷினி
IV C

# World Wildlife Day

## March 3rd

* world wildlife day is celebrated annually on the 3rd of march.
* This day was declared by the united Nation general assemply in 2013
* This day raises awareness of the world's wild fauna and flora.
* the theme of world wildlife day 2025 is wildlife conservation.
  - finance : investing in people and planet.
* wildlife refers to the animals plant and other living organisms that in habit natural environment
* the main aim of this day is to celebrate the many beautiful and varied forms of world animals and plants.

-R. Janani VIII-D

# உலக வனவிலங்கு தினம்



மார்ச் 3

V.ரித்திகா ஸ்ரீ -V-ஆ


WORLD WILDLIFE DAY
March 3
SAVE OUR WILDLIFE
S. Mithran...
IV A

# தேசிய பாதுகாப்பு

## தினம் மார்ச் - 4

* நமது நாட்டில் 1971 - ஆம் ஆண்டு மார்ச் 4 - ஆம் தேதி தேசியப் பாதுகாப்பு கவுன்சில் உருவாக்கப்பட்டது.

* மும்பையைத் தலைநகராகக் கொண்ட இந்த கவுன்சிலின் பிரிவு அனைத்து மாநிலங்களிலும் அரசு சாராத ஒரு தொண்டு நிறுவனமாக செயல்பட்டு வருகிறது.

* தொழில்துறையில் வளர்ச்சிதான் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த முடியும்.

* மார்ச் - 4 - ஆம் தேதியும் தேசிய தொழிலாளர் பாதுகாப்பு தினம் கொண்டாடப்படுகிறது.

S. Keerthika
VIII - D

# உலக கேட்போர் தினம்



* உலக கேட்போர் தினம் (World hearing day) ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 4 ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. * இந்த தினம் செவித்திறன் குறைபாடுகள் மற்றும் செவிசேமிப்பின் முக்கியத்துவத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலக சுகாதார நிறுவனம் மூலம் 2007 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாண்டு (2025) உலக கேட்போர் தினத்தின் தலைப்பு "நமது செவிகளை பாதுகாப்போம்" (Protect our ears) ஆகும், இது ஒலிக்குழப்பத்தால் ஏற்படும் செவித்திறன் பாதிப்புகளைத் தவிர்க்கும் முறைகளை வலியுறுத்துகிறது.

Tejasri . B
VIII - D

# சர்வதேச மகளிர் தினம்

## மார்ச் - 8

மார்ச் 8 ஆம் தேதி உலகெங்கும் கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினம் பெண்களின் உரிமைகளுக்காக நடத்தப்பட்ட போராட்டங்களின் நினைவாகவும் பாலின சமத்துவத்தை வலியுறுத்தியும் கொண்டாடப்படுகிறது.

சர்வதேச மகளிர் தினத்தின் வரலாறு:-

=> 1910 - இல் கிளாரா ஜெட்கின் என்பவரால் சர்வதேச மகளிர் தினம் என்ற கருத்தை முன்வைக்கப்பட்டது.

=> 1911 - இல் பல நாடுகளில் முதல் நினைவு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

K. ராகேஷ்
X - 'C'

# சர்வதேச மகளிர் தினம்.

மார்ச் :- 8

அன்பை புகட்டுவதில் அன்னை
அறிவை போதிப்பதில் ஆசிரியை
அரவணைப்பில் சகோதரி
மன தோடு உரையாடுவதில்
சிறந்த துணைவி.

நோயை குணப்படுத்துவதில் சிறந்த
மருத்துவர்.
விழி எதிர் தோன்றும் தெய்வம்
நீ பெண்ணே !

உணவளிப்பதில் :- அன்னபூரணி.
ஆதரிப்பதல் :- அன்னை தெரசா.
வீரத்தில் :- வேலுநாச்சி.
இப்படி வீராமாய் ! சாதனையாய் இருந்தன...

M. புகேஷ்.
X C.

# சர்வதேச மகளிர் தினம்
## மார்ச் - 8

மார்ச் 8 ஆம் தேதி உலகெங்கும் கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினம் பெண்களின் உரிமைகளுக்காக நடத்தப்பட்ட போராட்டங்களின் நினைவாகவும் பாலின சமத்துவத்தை வலியுறுத்தியும் கொண்டாடப்படுகிறது

சர்வதேச மகளிர் தினத்தின் வரலாறு:-

=> 1910- இல் கிளாரா ஜெட்கின் என்பவரால் சர்வதேச மகளிர் தினம் என்ற கருத்தை முன்வைக்கப்பட்டது.

A. திலோத்தம்மா
X-C

உலக மகளிர் தினம்:-

மார்ச் - 8 :-

வெள்ளையனை வெளியேற்றி வீர முழக்கம் இட்டவர் வேலுநாச்சியார்! வீரவாள் ஏந்தி வெற்றி முரசு கொட்டியவர் ஜான்சிராணி! கைலாயத்தை தன் கைகளால் கடந்து பக்தியில் சிகரம் தொட்டார். காரைக்கால் அம்மையார்! பெண்ணை நிலவென்பர் அந்த நிலவை சுற்றிவந்த பெண் கல்பனா சாவ்லா! பளு தூக்கி ஒலிம்பிக்கில் நம் பாரத பெருமை மீட்டார் கர்ணம் மல்லேஸ்வரி! இப்படி வீரமாய், பக்தியாய் சாதனையாய், சரித்திரமாய் ஆண்டாண்டு காலமாய் வீற்றிருப்பது பெண்மை! பெண்மையை போற்றுவோம்! பெண்மையை கொண்டாடுவோம்!

நன்றி:-



P. உமர்ஷா

X-C.

# சர்வதேச மகளிர் தினம்

மார்ச் - 8

பெண்கள் நாங்கள்
மண்ணில் கோலமிடுவோம்
அந்த விண்ணுக்கும் பாலமிடுவோம்!

உணவு சமைக்க அறிந்திடுவோம்!
உடுத் தொழிலும் தெரிந்திடுவோம்!

வீட்டைக் கூட்டி மெழுகிடுவோம்!
கட்டிடக்கலையிலும் தேறிடுவோம்!
தையல்கலை கற்றிடுவோம்!
நூல் அறிவும் பெற்றிடுவோம்!
மூத்தோர் சான்றோர் சொல் மதிப்போம்!
சந்த்ர துறையிலும் கால் பதிப்போம்!

வீட்டை பொறுப்பாய் காத்திடுவோம்!
நாட்டையும் சிறக்க செய்திடுவோம்!
பொறுமையில் பூமி நிலையாவோம்!
சிறுமை கண்டால் எரிமலையாவோம்!

அறிவியலில் தனி இடம் பிடிப்போம்!
அரசியலிலும் புகுந்தடம் பதிப்போம்!
சாதனைப் பெண்கள் சேர்ந்திடுவோம்!
சரித்திரங்க படைத்திடுவோம்!

S. கீதா
X - C

# சர்வதேச மகளிர் தினம் மார்ச் - 8

பெண்கள் நாங்கள்
மண்ணில் கோலமிடுவோம்!
அந்த விண்ணுக்கும் பாலமிடுவோம்!
உணவு சமைக்க அறிந்திடுவோம்!
உழவுத் தொழிலும் தெரிந்திடுவோம்
வீட்டைக் கூட்டி மெழுகிடுவோம்!
கட்டடக்கலையிலும் தேறிடுவோம்!
தையல்கலை கற்றிடுவோம்!
நால் அறிவும் பெற்றிடுவோம்!
மூத்தோர்சான்றோர்சொல் மதிப்போம்!
எந்தத்துறையிலும் கால்பதிப்போம்
வீட்டை பொறுப்பாய்க் காத்திடுவோம்!
நாட்டையும் சிறக்க செய்திடுவோம்!
பொறுமையில் பூமி நிலையாவோம்!
சிறுமை கண்டால் எரிமலையாவோம்!
சாதனைப் பெண்கள் சேர்ந்திடுவோம்
சரித்திரங்கள் படைத்திடுவோம்!

செ. ஸ்வேதா
X C

நன்றி!

# சர்வதேச மகளிர் தினம்

மார்ச் - 8

பெண்களுக்கு எதிரான அனைத்து
வன்கொடுமைகளையும் வேரறுக்கும் நோக்கில்
பெண் உரிமை மற்றும் பெண்கள் பாதுகாப்பை
முன்னிலை படுத்தி கொண்டாடப்படுவது
தான் உலக மகளிர் தினம்.....
பெண் வீட்டை ஆள்பவள் மட்டும் அல்ல,
நாட்டை ஆளும் திறமை படைத்தவள்
பெண்ணாக பிறந்தது நம் பெருமை.....
இந்த உலகில் நிபந்தனையற்ற அன்பையும்
பாசத்தையும் பரப்பும் அனைத்து
பெண்களும் பூமி தாய்......

ப. சுவாதி
X - 'இ'

# சர்வதேச மகளிர் தினம்

மார்ச் 8.

மார்ச் 8 ஆம் தேதி உலகெங்கும் கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினம் பெண்களின் உரிமைகளுக்காக நடத்தப்பட்ட போராட்டங்களின் நினைவாகவும் பாலின சமத்துவத்தை வலியுறுத்தியும் கொண்டாடப்படுகிறது.

## சர்வதேச மகளிர் தினத்தின் வரலாறு:-

⟹ 1910 - இல் கிளாரா ஜெட்கின் என்பவரால் சர்வதேச மகளிர் தினம் என்ற கருத்தை முன்வைக்கப்பட்டது.

⟹ 1911- இல் பல நாடுகளில் முதல் நினைவு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

பெ. ஹேமலதா

X - 'C'

HEMALATHA.


WOMEN'S
DAY
MAR-8TH
S.B. Tamilanbu
IX A



Jethesh. T
IX-A
மார்ச்
8
WOMEN's
Day-2025

HAPPY Womens Day
March. 8



Sakthivel. I
IX-"A"

விடியல் :- மகளிர் தினம்

8/3/2025
Saturday.

# கட்டுரை

## முன்னுரை :

பெண்கள் இல்லாமல் இந்த உலகமே இல்லை என்று தான் சொல்ல வேண்டும் அன்றைய காலத்தில் தான் பெண்கள் வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடந்தார்கள். ஆனால் அந்த நிலை தற்போது மாறி பெண்கள் அனைத்து துறையிலும் சாதித்து வருகின்றனர் மார்ச் மாதம் 8-ஆம் தேதி உலகம் முழுவதும் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

## மகளிர் தின சிறப்பு :

பெண்கள் இல்லாமல் இந்த உலகம் தனித்து இயங்க முடியாது என்பது என்பது 100% உண்மைதான் ஆணாதிக்க சமுதாயத்திலிருந்து பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுத்த நாள் தான் மகளிர் தினம் வீட்டை விட்டே பெண்கள் அன்றைய காலத்தில் வருவதற்கே யோசிப்பார்கள் அந்த நிலை மாறி இப்போது வானில் பறக்கும் அளவிற்கு பெண்கள் வளர்ச்சி அடைந்துள்ளார்கள்.

## பெண்களின் தாய்மை :

பெண்கள் தன் ஒரு ஆண்களை வயிற்றில் 10 மாதம் சுமந்து அவர்கள் நல்வழியில் செலுத்தி வைத்தாலும் பெண்களின் பெருமைகளையும், தியாகங்களையும் ஆண்கள் என்றுமே நினைத்துப்பார்ப்பதில்லை.

## மகளிர் தின வரலாறு :

பெண் அடிமைத்தனம் எங்கு இருக்கின்றதோ அங்கு தான் பெண் சுதந்திரம் மற்றும் பெண்களின் முன்னேற்றம் மற்றும் சம உரிமை மையமாக. வைத்து கி.பி 1909 - ல் அமெரிக்கா சோசலிஸ்ட் கட்சியினர் முதன் முதலாக மகளிர் தினத்தை பிப்ரவரி மாதம் 28 - 28 தேதி கொண்டாடினர் 1917 - க்குப்பின் உலக மகளிர் அமைப்புகள் ஒன்று பட மகளிர் தினத்தை பெண்கள் மார்ச் - 8 என்று கட்டமைத்தனர் மகளிர் தினத்தை பெண்கள் மட்டும் கொண்டாடாமல் ஆண்களும் இணைந்து கொண்டாட வேண்டும் அப்போதான் அன்றைய தினம் முழுமை பெறும்.

## பெண்கள் குடும்ப பங்கு :

ஆண்களை விட பெண்கள் தான் குடும்ப பங்கு ஆற்றலில் கைதேர்ந்தவர்களாக இருப்பார்கள் வெளியில் வேலைக்கு செல்வது மட்டுமே ஆண்களின் பணியாக இருக்கிறது. பெண்கள் பணிக்கு செல்லாவிட்டாலும் அனைத்து இன்னல்களையும் அவர்கள் சந்தித்து வருகிறார்கள் இத்தகைய பெண்களை போற்றிடவே சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

## அனைத்து துறையிலும் பெண்களின் பங்கு :

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்ற நிலை அப்போது காலம் காலமாக இருந்து வந்தது கற்றவர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற பழமொழிக்கேற்ப இப்போதுதான் அனைத்து பெண்களும் கல்வி கற்று சாதனை படைத்தனர் ஆண்கள் ஆண்கள் மட்டுமே அனைத்து துறையிலும் பணிபுரிந்து வந்த நிலை மாறி பெண்களும் இப்போது விமானம் துறை ஆசிரிய பணி கப்பல் துறை அலுவலக பணிகள் காவல் துறை போன்ற அனைத்து துறையிலும் பங்காற்றி வருகிறார்கள்.

## சாதனைப் பெண்கள்:

பெண்கள் தினத்தை போற்றும் விதமாக அன்னை தெரேசா, கல்பனா சாவ்லா, மேரி கியூரி வீரமங்கை வேலுநாச்சியார் கிரண்பேடி போன்ற அவர்களை ஒரு முறை நாம் நினைத்துப்பார்ப்போம்.

## முடிவுரை:

பெண்களை நாட்டினுடைய கண்கள் பெண்கள் எப்போதும் ஆண்களுக்கு நிகராக பார்க்கிறோம் என்றால் பெண்களுக்கு கண்டிப்பாக எந்த பாதிப்பும் ஏற்படாது.

## பெண்மையை ஆண்கள்:

எப்போதும் தாய்மை போற்றத்தான் வேண்டும் எனவே மகளிர் தினத்தில் அவர்களுக்கு நாம் நமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைவோம்.

# மகளிர் தினம்

பெற்றோரை நிலையில்
அமர்ந்து....
கணவனை இதயத்தில்
அமர்ந்து....
குழந்தைய கனவில்
அமர்ந்து...
குடும்ப பாரத்தை தலையில்
அமர்ந்து....
இவை அனைத்தும் சுகமான
சுமை என சிரித்துக் கொண்டே
செல்பவள் தான் " பெண் "
....
அனைத்து பெண்களுக்கும்.
மகளிர் தின வாழ்த்துக்கள்......

இனிய மகளிர் தினம்

நல்வாழ்த்துக்கள்.

இப்படிக்கு
R. லோகித்
VII-C

# மார்ச் - 8
# மகளிர் தினம்...

புயல் வீசினாலும் நிலைநிற்பாள்,
பொற்கதிராய் உலகை ஒளிர்வாள்.
அன்பின் தூபம், அழகின் செம்பொன்,
அறிவால் உலகை ஆளும் பெண்!

காற்றாய் பறக்கும் கனவுகளுடன்,
கண்மணி போல காத்திருப்பாள்.
கண்ட கடலின் ஆழமெல்லாம்,
கருணை கொண்டு நிரப்புவாள்!



மார்ச் எட்டு நாள் மகளிர் தினம்,
மாற்றம் தேடும் விழிகள் விழிக்கும் தினம்.
பெருமிதம் கொண்டே சொல்லுவோம் நாம்,
பெரிய கனவுகள் கண்டு வெல்வோம் நாம்!
- ❤ பெண்களுக்கான உரிமை, நீதிக்கான உரிமை! ❤

கோ. பூஜாஸ்ரீ
VII-C



## மார்ச் - 8 சர்வதேச மகளிர் தினம்

அன்னைக்குக் குழந்தையானாள்!
தந்தைக்கு அன்னையானாள்!
அன்பூட்டும் தமக்கையானாள்!
பாசம் பொங்கும் தங்கையானாள்!
அழகொளிரும் நங்கையானாள்!
மணாளனுக்கேற்ற மங்கையானாள்!
இல்லத்தின் தலைவியானாள்!
உள்ளங்கவர் மனைவியானாள்!
அக்கறை காட்டும் அண்ணி ஆனாள்!
நலம் விரும்பும் நாத்தி ஆனாள்!
கடமை செய்யும் மருமகளானாள்!
வளம் உயர்த்தும் திருமகளானாள்!
நேசம் பகிரும் தோழியானாள்!
கற்றுக் கொடுக்கும் ஆசானானாள்!
வேலை செய்யும் தாதி ஆனாள்!
துணைவனின் பாதி ஆனாள்!
தன் குழந்தைக்குத் தாயானாள்
இனிய குலதெய்வமுமானாள்!

செ.ரசிகா
VII-C

# சர்வதேச மகளிர் தினம்

## மார்ச்- 8

வாழ்க்கை ஒரு வானவில் என்றால்,
பெண்கள் அதன் நிறங்கள்
எங்கள் வாழ்க்கையை மேம்படுத்தும்
பெண்கள் அனைவருக்கும் மகளிர் தின
நல்வாழ்த்துகள்.....!

ஒரு பெண்ணின் அன்பை
அளக்க அளவுக் கோல்
கூட போதாது.
மங்கையராய் பிறப்பதற்கே
மாதவம் செய்திடல் வேண்டுமம்மா
உலகை ஒருமித்து உறைய வைக்கும்
ஒற்றுமை, அது பெண்ணின்
இருப்பில் காணும் பெருமை....

P. கீர்த்தனா
VIII-D

# WOMEN'S Day.....

*) 8th March is celebrated as international women's day. this day is special for women. all around the world it's a day to recognize thier achivements struggles and contribution to society. women play many important roles in our lives they are mothers, sister, daughter and friends. they work hard to care thier families.

N. Tamilselvi. VIII-D

# சர்வதேச மகளிர் தினம் - மார்ச் 8

பெற்றோரை நினைவில்
சுமந்து
கணவனை இதயத்தில்
சுமந்து
குழந்தையை கருவில் சுமந்து
குடும்ப பாரத்தை தலையில்
சுமந்து
இவை அனைத்தும் சுகமான
சுமை என சிரித்துக்கொண்டே
செல்பவள் தான் பெண்

உத்ரா G III D

## சர்வதேச மகளிர் தினம் மார்ச் 8

பெண்கள் நாங்கள் மண்ணில் கோலமிடுவோம்!
அந்த விண்ணுக்கும் பாலமிடுவோம்!
உணவு சமைக்க அறிந்திடுவோம்!
உழவுத் தொழிலும் தெரிந்திடுவோம்!
வீட்டைக் கூட்டி மெழுகிடுவோம்!
கட்டிடக்கலையிலும் தேறிடுவோம்!
தையல்கலை கற்றிடுவோம்!
நூல் அறிவும் பெற்றிடுவோம்!
மூத்தோர் சான்றோர் சொல் மதிப்போம்!
எந்தத்துறையிலும் ஜொலிப்போம்!
வீட்டை பொறுப்பாய்க் காத்திடுவோம்!
நாட்டையும் சிறக்க செய்திடுவோம்!
அறிவியலில் தனி இடம் பிடிப்போம்!
அரசியலிலும் புகழும் பதிப்போம்!
சாதனைப் பெண்கள் சேர்ந்திடுவோம்!
சரித்திரங்கள் படைத்திடுவோம்!

A. அவந்திகா
IV - B

மார்ச் -8

# சர்வதேச மகளிர் தினம்

அன்பின் இலக்கணம் அவள்
ஆற்றல் மிகுந்தவள்
இரக்க மனம் கொண்டவள்
ஈகையில் உயர்ந்தவள்
உள்ளத்தில் உறுதி கொண்டவள்
ஊக்கத்துடன் இருப்பவள்
எங்கும் நிறைந்திருப்பவள்
ஏற்றம் தரும் ஏணி அவள்
ஐயமின்றி தியாகத்தின் திருவுருவம் அவள்
ஒழுக்க நெறி கொண்டவள்
ஓயாது உழைப்பவள்
ஔவை வழி நின்றவள்
அஃதே பெண்மையின் பெருமையே
பெண்மையை போற்றுவோம்
பெண்மையை கொண்டாடுவோம்

N. சர்மிளா
IV C

# சர்வதேச மகளிர் தினம்

மார்ச் - 8



Where there is a woman
there is magic

Bujan kumar
V-A

உலக மகளிர் தினம் - March 8

பெண்ணே! உன்னை நீயே செதுக்கிக் கொள்
உளி கொண்டல்ல வலி கொண்டு...!
உடனிருப்பவர் எவரும் தோள் கொடுப்பார்
தூக்கி விடுவார் என்றெண்ணி உன்
கனவுகளை சிதைக்காதே!
பழி சொல்லும் உலகமடி...
வழி கேட்டு நில்லாதே...
இரவுகள் இப்படித்தானென்று ஓரிரு துளி
விழிநீர் விட்டொழிந்து விட்டு எழுந்து நில்...
துணிந்து செல்....
பறந்த இவ்வுலகில் உனக்கான கதவுகள்
எங்கோ சிறந்திருக்கும்...!
மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம்
செய்திடல் வேண்டுமம்மா!

— தேசிக விநாயகம் பிள்ளை

உலக மகளிர் தின வாழ்த்துகள் march 8.



"Where there is a women there is magic"

J. பிரியதர்ஷன்
V - D

WOMEN'S DAY




S.திவ்யதர்ஷினி
VIII-B

# உலக ஊனமுற்றோர் தினம்

மார்ச் - 15

* தளராத தன்னம்பிக்கையோடும் மன உறுதியோடும் சவால்களை எதிர்கொண்டு சாதித்துக் கொண்டிருக்கும் மாற்றுதிறனாளி சகோதர சகோதரிகள் அனைவருக்கும் சர்வதேச மாற்றுதிறனாளிகள் தினத்தில் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

* மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கை நலம் பேணவும், சம உரிமை பெற்ற சமூக நிலை காணவும் எண்ணிலடங்காத் திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு அம்மாவின் அரசு அவர்தம் வாழ்வு வளம் பெற இன்று போல் என்றும் உறுதுணையாக இருக்கும்.

* மனதில் ஊனத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் ஊனம் என்பது உடலில் இல்லை என தைரியமாக வாழ்ந்து வரும் மாற்றுத்திறனாளிகளை ஊக்கிவிக்கவே இந்த தினம்.

ஓ. ஹாஷினி
viii - D

March:15

# World consumer day

- World consumer day is celebrated on March 15th every year
- Marking "world consumer rights Day" and raising global awareness about consumer rights, protection and empowerment.
- This day is inspired by president John.F. kennedy's Speech to the US congress on March 15, 1962,
- Where he first formally addressed consumer Rights issues....



N.Manisha. VIII-"D"

ஆயுதப்படை உற்பத்தி தினம்

MARCH - 18



V. Naveen Raj

III - B

# இனிய பனை தினம்

## march 18

* உலக பனை உற்பத்தி தினம் march 18 அன்று கொண்டாட படுகிறோம்

* பனை உற்பத்தி மூலம் பல வகையான ஆய்த பனை பொருட்களை உருவாக்கிறோம்

* பனை உற்பத்தி தினம் வரலாற்று மிக்க தாகும்

* பனை உற்பத்தி மூலம் போர்ருக்கு எளிதாக உள்ளது

* பனை உற்பத்தி மூலம் இதவ்வுலகில் பல வகையான பொருட்கள் உள்ளது.

M. Naviya ஸ்ரீ
VIII-டி

# உலக சிட்டுக்குருவி தினம்

மார்ச் - 20



P. Savitha

VII-B

மார்ச் - 12

# உலக சிறுநீரக தினம்.



சிறுநீரகங்கள் (Kidneys) என்பவை முதுகெலும்பிகளின் உடலின் இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் அவரை விதை வடிவில் அமைந்த உறுப்புகளாகும். முதிருயிரிகளில் இது 11 செமீ நீளம் கொண்டுள்ளது. ஒவ்வொரு சிறுநீரகத்திலும் ஒரு சிறுநீர்க்குழல் இணைந்துள்ளது. ஒவ்வொரு நீரகத்திலும் ஒரு சிறுநீர்க்குழல் இணைந்துள்ளது. இந்தக் குழல் சிறுநீரைச் சிறுநீர்ப் பைக்குக் கொண்டுசெல்கிறது.

S. Monisha
VIII-D

# உலக சிறுநீரக தினம் - மார்ச் - 12



K. ANUSRI
III A

# உலக சிறுநீரகம் தினம்



மார்ச் 12

* சிறுநீரகங்கள் என்பவை முதுகெலும்புகளின் உடலின் இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் அவரைவிதை வடிவில் அமைந்த உறுப்புகளாகும்.

* இவை பின்வயிற்றுப் பகுதியில் அமைந்துள்ளது. ஒவ்வொரு சிறுநீரகத்திலும் ஒரு சிறுநீர்க்குழல் இணைந்துள்ளது. இந்தக்குழல் சிறுநீரைச் சிறுநீர்ப் பைக்குக் கொண்டுசெல்கிறது.

* பெண்களை விட ஆண்கள் தனி சிறுநீரகத்துடன் பிறந்து சிறுநீரகங்களை தானம் செய்வதற்கான வாய்ப்புகள் அதிகம்.

M.திவ்யா V-B

# சர்வதேச மகிழ்ச்சி தினம்

-மார்ச் 20

- சர்வதேச மகிழ்ச்சி தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச்(20) அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் 2012 ஜூன் 28 அன்று இந்த தினம் நிறுவப்பட்டது.

- சர்வதேச மகிழ்ச்சி தினத்தின் நோக்கங்கள்:

உலக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக வாழ்வதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள வேண்டும், உலக மகிழ்ச்சி இயக்கத்தை ஊக்குவிக்க வேண்டும்.

சர்வதேச மகிழ்ச்சி தினத்தின்போது ஐக்கிய நாடுகள் ஒரு அறிக்கையை வெளியிடுகிறது இந்த அறிக்கையில் எந்த நாட்டில் மக்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்பது கூறப்படுகிறது.

S.B. Tamil anbu
IX A

# உலக சிட்டுக்குருவி தினம்

- மார்ச் 20

* உலக சிட்டுக்குருவி தினம் ஆண்டு தோறும் மார்ச் 20-ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. பல்லுயிர் மற்றும் சுற்றுச்சூழல் சமநிலையை பராமரிப்பதில் சிட்டுக்குருவிகளின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

## உலக சிட்டுக்குருவி தினத்தின் முக்கியத்துவம்

* வீட்டுக் குருவிகள் மற்றும் பிற பொதுவான பறவைகளைப் பாதுகாப்பதற்கான செய்தியை தெரிவிக்க இந்த நாள் கொண்டாடப்படுகிறது
* சிட்டுக்குருவிகள், கொசுக்களை அழிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.
* சிட்டுக்குருவிகள், கொசுக்களை, விதைகளை பரப்புவதிலும் உணவுச் சங்கிலியிலும் முக்கிய பங்காற்றுகின்றன.

S.B. Tamil anbu
IX A


March, 20
International
Day of
HAPPINESS
Happiness
Be Happy And
Make Everyone Around
you Happy!
S. Lakshmi Devi
VII-D

# சிட்டுக்குருவி தினம்

மார்ச் - 20

* சிட்டுக்குருவி ஒரு சிறிய பறவை ஆகும். இவை முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும்.

* சிட்டுக்குருவி இனம் வீட்டுக் குருவிகள், ஊர்க் குருவிகள், அடைக்கலக் குருவிகள் சிட்டுக்குருவிகள் ஆகிய பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

* இந்தியாவில் இவை வீட்டுக் குருவிகள், ஊர்க்குருவிகள், அடைக்கலக் குருவிகள், சிட்டுக்குருவிகள் ஆகிய பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

L. திவ்ய டனிஷ்டா
VII - D


உலக சிட்டுக்குருவி தினம்
MAR-20
20/Mar/2025
N.Vasanthan
VI-A


World water day
SAVE WATEY
SAVE LIFE
March-20th
M.Hema Shree VI-B

# World Sparrow Day

* World Sparrow day is celebrate on March 20 every year.

* The first world sparrow Day was celebrated in 2010

* Sparrow feed their children with small insects

* These insects are extremely dangerous for crops

* The day to raise awareness and protect the sparrows, which are not so commonly seen now due to increasing noise pollution.

* House sparrows are generally found in Asia, North africa and Europe.

* Scientific name of sparrows is passeridae.

K-Agalya
VIII - D




# WORLD HAPPINESS DAY

* The Day of Happiness is celebrated worldwide on march 20, and was declared by the united Nations in 2012
* This day is an opportunity to highlight the important of Happiness and well-being and spread it around the world.

S. Dharshini
VIII-D

# சர்வதேச மகிழ்ச்சி தினம்

**மார்ச் -20**



நாம் மகிழ்ச்சியைத் தேடி
துரத்துவது அல்ல வாழ்க்கை.
நாம் வாழ்வினை
அமைதியாய் ரசிக்கும் போது
மகிழ்ச்சி நம்மிடம் தானே
வந்து சேர்ந்து விடும்...!!

மகிழ்ச்சி என்பது
ஒருபோதும் தானாக
வருவதில்லை; அது
உங்கள் செயல்களின்
மூலமே கிடைக்கிறது.

நமக்கு கிடைக்கும்
மகிழ்ச்சி என்பது
இடங்களை பொறுத்து
அமைவது இல்லை..
நம்மோடு பயணிக்கும்
மனிதர்களை பொறுத்தே
அமைகிறது.

பி.லவ்லி பிரசன்யா
VIII - B

# உலக சிட்டுக்குருவி தினம்

## மார்ச் 20



M. ரோகித்
IV "B"

# உலக வனவிலங்கு தினம்

டிசம்பர் 20, 2013 அன்று ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையின் 68 வது அமர்வு உலகின் காட்டு விலங்குகள் மற்றும் தாவரங்கள் பற்றிய விழிப்புணர்வைக் கொண்டாடுவதற்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் மார்ச் 3ஆம் தேதியை உலக வனவிலங்கு தினமாக அறிவித்தது.

வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் என்பது உலக வனவிலங்கு தினத்தின் நோக்கம் ஆகும்.

த. ஜெஸ்லின் சக்தி
V - C

# சர்வதேச மகிழ்ச்சி தினம்

மார்ச் - 20



சிரித்து பாருங்கள்
உங்கள் முகம் உங்களுக்கு
பிடிக்கும்...
சிரிக்க வைத்து பாருங்கள்
உங்கள் முகம்
எல்லோருக்கும் பிடிக்கும்...!!

M. பிருந்தா
III - C

உலக சிட்டுக்குருவி தினம்

மார்ச் - 20



V. கிஷோர்
IV C

# சர்வதேச மகிழ்ச்சி தினம்

மார்ச் - 20



மகிழ்ச்சி என்பது ஒரு
மனநிலையே அதைக்
கற்றுக் கொண்டால் துன்பத்திலும்
கூட மகிழ்ச்சியுடன்
இருக்க முடியும்

S. Aswini
V - A

# உலக சிட்டுக்குருவி தினம்



மார்ச் 20

* நாளுக்கு நாள் அழிந்துகொண்டே வரும் சிட்டுக்குருவிகளை பாதுகாக்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் சிட்டுக்குருவிகள் தினம் கொண்டாடப்படுகிறது.

* மனிதகுலத்துக்கு சிட்டுக்குருவிகள் ஆற்றும் பணி அளப்பரியது. சில ஆண்டுகளுக்கு முன் சிட்டுக்குருவியின் ஆயுட்காலம் 13 ஆண்டுகளாக இருந்தது. ஆனால், தற்போது 5 ஆண்டாக குறைந்துள்ளது.

கே. மகாதேவி V-'B'

உலக கவிதை தினம்.

மார்ச் -21.

உலக கவிதை தினம் மார்ச் 21 அன்று கொண்டாடப்படுகிறது. மேலும் 1999 ஆம் ஆண்டு யுனெஸ்கோவால் (ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு) 'கவிதை வெளிப்பாடு மூலம் மொழியியல் பன்முகத்தன்மையை ஆதரிப்பதையும், அழிந்து வரும் மொழிகள் கேட்கப் படுவதற்கான வாய்ப்பை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டது" என அறிவிக்கப்பட்டது. நோக்கம் உலகம் முழுவதும் கவிதை வாசிப்பு எழுதல் வெளியீடு மற்றும் கற்பித்தலை ஊக்குவிக்கிறது.

R. நித்தியஸ்ரீ

X-C

## உலக கவிதைகள் தினம் - Mar-21

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட
பார்வையும், நிலத்தில் யார்க்கும்
அஞ்சாத நெறிகளும் திமிர்ந்த
ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ
தில்லையாம்;
அமிழ்ந்து பேரிரு ளாமறி
யாமையில்;
அவல மெய்திக் கலையின்றி
வாழ்வதை;
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற
மாகுமாம்;
உதய கன்னி உரைப்பது
கேட்டிரோ!

—எழுதியவர் பாரதியார்...

M.காவியா
VII-13

# உலக கவிதை தினம்
## மார்ச்-21

கல்வி என்பது கடல் அதை
கற்றுக் கொடுப்பது தொழில் அல்ல
தவம்..... நம்பிக்கை கை விட்டாலும்
நீ கற்ற கல்வி என்றும் உன்னை
கை விடாது. இருளில் இருந்து
வெளிச்சத்தை நோக்கி பயணிப்பதே
கல்வி. கல்வியின் அழகான
விஷயம் என்னவென்றால்......
கல்வியை உங்களிடமிருந்து
யாரும் பறிக்க முடியாது.

பூ.ரித்திகா
VII-C

# தேசிய கவிதை தினம் - மார்ச்-21

* கவிதையின் தனித்துவமான திறனைக் கௌரவிக்கும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.

* உலகக் கவிதை தினத்தை அனுசரிப்பதன் நோக்கம் :

* உலகம் முழுவதும் கவிதையை எழுதுதல், படித்தல், பிரசுரித்தல், கற்பித்தல் ஆகியவற்றை ஊக்குவித்தல்

* கவிதையின் தனித்துவமான திறனை அங்கீகரித்தல்.

புரியாதவர்களுக்கு
ஆயிரம்...
வினாக்கள். புரிந்தவர்களுக்கு
ஒரு சிரிப்பு
போதுமானது

S. வைஷ்ணவி
IV - "A"


World Forest
day
March 21
A.K. Iniya Sri VIII-D

# WORLD POETRY DAY



MARCH - 21

★ World poetry Day is celebrated on March - 21st.

★ The day is celebrated to promote poetry, encourage, dialogue between poetry and other arts, and support small publishers.

★ UNESCO adopted World poetry Day in 1999 to support linguistic diversity and endangered language.

World



Poetry

Day.

T. Pooja
VII-D

# ★ World Poetry Day ★



MARCH - 21

⇒ World Poetry day is celebrated on march - 21st.

⇒ The day is celebrate to Promote Poetry and Support Publishes.

⇒ UNESCO adopted world Poetry day is 1999 to Support linguistic diversity and endangered language.

B. Anunaya
VIII - D

Poetry is like those
droplets of tears
if you wont flow the way
it comes
you will never know
How beautiful it is
in the way it exists
Raw vulnerable
yet comforting




M. Dharshini V.D

உலக தண்ணீர் தினம் - மார்ச் 22.



VIII-C RMohanaSRI

# உலக நீர் தினம்

மார்ச் ௨௨

பூமியில் உயிர்கள் வாழ்வதற்கான
அடிப்படை விஷயங்களில் ஒன்றாக
இருக்கிறது நீர். ஆழ்கடலில் வாழும்
உயிரினங்களுக்கும் பாலைவனத்தில்
வாழும் உயிரினங்களுக்கும் நீரின்றி
வாழ்க்கை இல்லை. நீரே பூமியில்
உயிர்கள் வாழ்வதற்கான வாய்ப்பை
வழங்கியிருக்கிறது. மற்ற கோள்களில்
உயிரினங்களைத் தேடும்
விஞ்ஞானிகள் முதலில் நீர்
இருக்கிறதா என்றுதான் பார்க்கிறார்கள்.

S. சண்முகப்ரியா

X-C

## உலக நீர் தினம்

### மார்ச் 22

ஊற்றுப் பெருக்காய் வெளி வருவேன்.
ஆற்றின் மூலம் உலகளப்பேன்.
ஒளி உலகை படைத்திடுவேன்-
படைத்த பின்னே காத்திடுவேன்
சுத்தம் செய்ய பயன்படுவேன்.
சுகாதார வாழ்வு தந்திடுவேன்.
ஆக்கம் அழிவு செய்திடுவேன்.
அண்டம் முழுவதும் பரந்திடுவேன்
மின்னாற்றல் உருவாக்கி வழி வகுப்பேன்.
மீன்கள் வாழ வழி செய்வேன்.
பனிக்கட்டியாய் மாறிடுவேன்.
பலமாய் மழையாய் பெய்திடுவேன்
பயிர்கள் செழிக்க உதவிடுவேன்
ஆவி போலே மாறிடுவேன்.
ஆகாயத்தில் நிறைந்திடுவேன்.
வான் அமுதாய் கீழ் வருவேன்.
வாழ்கை பயிர்க்கு உயிர் கொடுப்பேன்.

B - கோகுல்ராஜ்
X C

# உலக நீர் தினம்

## மார்ச் 22

பூமியில் இருக்கக்கூடிய 95.5 சதவீத நீர் கடல்களில் இருக்கிறது. பூமியில் மேற்பரப்பு 71 சதவீதம் நீரால் சூழப்பட்டிருக்கிறது. 0.001 சதவீத நீர் வளிமண்டலத்தில் நமக்கு மேலே மிதக்கிறது. அந்த நீர் அனைத்தும் ஒரே நேரத்தில் மழையாகப் பெய்தால் பூமி ஓர் அங்குல உயரத்துக்கு நீரைப் பெறும்

S. தருண்
X-C

# உலக நீர் தினம்

## மார்ச் 22

* பூமியில் உயிர்கள் வாழ்வதற்கான அடிப்படை விஷயங்களில் ஒன்றாக இருக்கிறது நீர். ஆழ்கடலில் வாழும் உயிரினங்களுக்கும் பாலைவனத்தில் வாழும் உயிரினங்களுக்கும் நீரின்றி வாழ்க்கை இல்லை. நீரே பூமியில் உயிர்கள் வாழ்வதற்கான வாய்ப்பை வழங்கியிருக்கிறது. மற்ற கோள்களில் உயிரினங்களைத் தேடும் விஞ்ஞானிகள் முதலில் நீர் இருக்கிறதா என்றுதான் பார்க்கிறார்கள்

ஆ. மோனிஷா

X-C

## உலக நீர் தினம்

மார்ச் 22

*) ஊற்றுப் பெருக்காய் வெளி வருவேன்.
ஆற்றின் மூலம் உலகளப்பேன்
படைத்த பின்னே காத்திடுவேன்.
ஊர் உலகை படைத்திடுவேன்.
சுத்தம் செய்ய பயன்படுவேன்.
சுகாதார வாழ்வு தந்திடுவேன்.
அண்டம் முழுதும் பரந்திடுவேன்.
ஆக்கும் அழிவு செய்திடுவேன்.
மீன்கள் வாழ வழி செய்வேன்.
மின்னாற்றலுக்கு வழி வகுப்பேன்.
பலமாய் மழையை பெய்திடுவேன்.
பனிக்கட்டியாய் மாறிடுவேன்.

A. ஹரிராம் பிரசாத்
X - C.

# உலக நீர் தினம்

மார்ச் 22

* ஊற்றுப் பெருக்காய் வெளி வருவேன்.
ஆற்றின் மூலம் உலகளப்பேன்.
ஊர் உலகை படைத்திடுவேன்.
படைத்த பின்னே காத்திடுவேன்.
சுத்தம் செய்ய பயன்படுவேன்.
சுகாதார வாழ்வு தந்திடுவேன்.
ஆக்கம் அழிவு செய்திடுவேன்.
அண்டம் முழுதும் பரந்திடுவேன்.
மின்னாற்றலுக்கு வழி வகுப்பேன்.
மீன்கள் வாழ வழி செய்வேன்.
பனிக்கட்டியாய் மாறிடுவேன்.
பலமாய் மழையாய் பெய்திடுவேன்.
பயிர்கள் செழிக்க உதவிடுவேன்.
ஆவி போலே மாறிடுவேன்
ஆகாயத்தில் நிறைந்திடுவேன்.
வான் அருவியாய் கீழ் வருவேன்.
வாழ்வை பயிர்க்கு உயிர் கொடுப்பேன்.

ப. வெண்மதி

X-C

# உலக நீர் தினம்



*.) உலக நீர் நாள், ஐக்கிய நாடுகள் அவையின்
தீர்மானத்துக்கு இணங்க ஆண்டு தோறும்
மார்ச் 22 ஆம் நாள் உலகெங்கும்
கொண்டாடப்படுகிறது...

V. அஷ்வின்
VIII-A

# உலக தண்ணீர் தினம் - மார்ச்-22

மார்ச் 22 உலக தண்ணீர் தினம் மனித ஆரோக்கியத்திற்கும் உயிர்வாழ்விற்கும் தண்ணீர் இன்றியமையாதது, மேலும் தண்ணீரை அணுகுவது மனித உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கடந்த 21 ஆண்டுகளில், பாதுகாப்பாக நிர்வகிக்கப்படும். குடிநீருக்கான உலகளாவிய அணுகல் (குழாய் போர்வெல் அல்லது பாதுகாக்கப்பட்ட கிணறு போன்ற மேம்படுத்தப்பட்ட மூலங்களிலிருந்து வரும் நீர் வளாகத்திற்குள் அணுகக்கூடியது தேவைப்படும்போது கிடைக்கும் மற்றும் மாசுபடாமல் இருப்பது) சீராக முன்னேறியுள்ளது. பாதுகாப்பாக நிர்வகிக்கப்படும். குடிநீரை அணுகும் உலக மக்கள் தொகையின் விகிதம் 2000 ஆம் ஆண்டில் 62% இலிருந்து 2020 இல் 74% ஆக அதிகரித்துள்ளது.

PRASANTh.D
IX-A


மார்ச்-22 உலக நீர் தினம்
B.Vishal
IX-A


உலக நீர் தினம்
மார்ச் - 22
'VII-A'




S. Pravitha - VII - B



WORLD WATER Day
22 MARCh....
N.S. Keerthana VII-B.

மார்ச் - 22

# உலக நீர் தினம்

தண்ணீரே!... உன்னை
மண்ணுக்குள் சேமிக்க மறந்து!
விண்தாண்டி சோதிக்க பறந்தோம்
ஆழ்கடலில் உன்னை கலக்க விட்டு
ஆகாயத்தில் உன் வரவிற்கு காத்திருந்தோம்
சீர்படுத்தாக குளம், குட்டைகளால் உன்னை
வழியவிட்டோம்
ஆழம் பல தோண்டி உன்னை பார்க்க
ஆசைப்பட்டோம்
அன்று துளியும் தெளிவில்லாமல் உன்னை
செலவு செய்தோம்
இன்று உன் தெளிந்த ஒரு துளிக்காக
செலவு செய்கிறோம்
அப்போது மண்ணில் விழுந்த
உன்னை பொன்னாய் சேமிக்க
மறந்தோம் !!
நீர் இன்றி அமையாது உலகு.

சா. சாதனா
VII - D


March-22 - உலக நீர் தினம்
RESHMI . S
VII - D

உலக நீர் தினம் மார்ச் 22



G. Joshika VI-A


MAR 22 உலக நீர் தினம்
SAVE WATER
SAVE LIFE
R. Sabeethan.
VI-C.

WORLD WATER DAY... MARCH 22



ART BY;
TASHWAN VID


WORLD WATER DAY - 22 MARCH.
SAVE WATER...
V. Yuva Sree
VIII -D

# World water day.

World water Day is observed to create awareness about water and climate and change.
Water is the most valuable natural resource that needs to be preserved and used responsibly.
The Annual Theme for world water day 2020 is water and climate change
AS a public we need to start using water more efficiently and using contribution our part to this day.

S. Lakshmi VIII-D

மார்ச் - 22

# உலக நீர் தினம்

பூமியிலே உயிரினங்கள்
தோன்றியது நீராலே
புல்வெளியும் வயல்வெளியும்
செழித்தது நீராலே
மரங்கள் தழைத்து நிற்க
உதவுவதும் நீர்தானே
புல்லைத் தின்னும் ஆடும் மாடும்
தேடுவது நீரைத்தானே
பரந்திருந்த ஆறு கடல்
நிறைந்ததுவும் நீரால்தானே
பார் உலகை அளந்து பார்த்தால்
பாதிக்கு மேல் நீர்தானே

தி.ரோஷித்
V-C

உலக காலநிலை தினம்

MARCH - 22

SAVE WATER



III A

S. hemanth Kumar

உலக வானிலை தினம் மார்ச் 23



# உலக வானிலை தினம்.

- மார்ச் 23

வானமே எல்லை என்றும்;
வானிலும் உயர்ந்தது என்றும்
போற்றிப் பாடிடும்
வானம் பாடி பறவையாய் ஆர்ப்பரித்து
வான்மழை தந்து உயிர் செழிக்க
வாழ்வளிக்கும் வானத்தை
உலக வானிலை நாளில்
கொண்டாடுவோம்!

மு. சௌமியா
VII-C

# World Weather Day



World weather day is March "23"

Weather is the day to day change in the atomosphere.

It influences Our daily lives

It change all the time

The study of weather is called "Meteorology"

S. Hinduja VIII - "D"

உலக வானிலை தினம் மார்ச் ௨௩



A. Srinithi
VII-D

உலக காசநோய் தினம் - மார்ச் - 24

உலக காசநோய் தினத்தின் நோக்கங்கள்:

காசநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல், காசநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு முயற்சிகளின் நிலை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், உலகளாவிய சுகாதார முயற்சிகளை வலியுறுத்தல், காசநோயை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பரவல் சங்கிலியை உடைத்தல். காசநோய் தடுக்கக்கூடியது மற்றும் சிகிச்சையளிக்கக்கூடியது. மருந்து - எதிர்ப்பு காசநோய் ஒரு பெரிய சுகாதார அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. மருந்து - எதிர்ப்பு காசநோய் உலகளாவிய காசநோய் தொற்றுநோயை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஆதாயங்களை ஆபத்தில் ஆழ்த்துகிறது.

PRASANth. D
IX-A



# Tuberculosis (TB) day

## 24 March

* Every year the world TB day is celebrated on march 24.

* Tuberculosis is a dangerous disease

* IUATLD first encountered the infectious disease called TB in 1892.

T. yuvasree
VIII - D

# காசநோய் தினம்

மார்ச் - 24




→ மைக்கோ பாக்டீரியம் டியூபர் -குளோசிஸ் என்ற பாக்டீரியாவால் தான் காசநோய் தோன்றுகிறது.

→ நுரையீரல் மூலமாக நமது உடலில் காசநோய் கிருமி செல்கிறது.

B. நித்திஷ் யாதவ்
V-A